எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளால் மேற்படி நடவடிக்கைகள் மேலும் தீவிரமாகத் தொழிற்படுத்தப்பட்டன. இம்மாதத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இறக்குமதிகளை குறைக்கும் தன்மையையும் அன்றி வரவு செலவு திட்டக்குறையைக் குறைக்கும் தன்மையையும் வாய்ந்தவை. இந்நடவடிக்கைகள் வரவு செலவு திட்டக்குறையை குறைப்பதன் மூலம் சென்மதி நிலுவையில் அனுகூலமான பயன்களைக் கொண்டுவரும் தன்மைவாய்ந்தனவாகவும் விளங்குகின்றன. இவ்வாண்டின் நான்காம் காற்பகுதியில் பர்மாவுக்கு செய்த கொடுப்பனவாகிய 385 இலட்சம் ரூபாய்களுக்கு இடம் விட்டபின்னர், இக்காற்பகுதியில் நடைமுறைக்கணக்கு நிலைமையில் ஏற்பட்ட சீர்த்திருத்தத்திற்கு ஓரளவு ஆவணி மாதம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உதவியிருக்க வேண்டும். 1960ம் ஆண்டின் நான்காம் காற்பகுதியில், பர்மாவுக்குக் கொடுத்த தொகைக்கு இடம் விட்டபின்னர், அக்காற்பகுதியில் ஏற்பட்ட ஒதுக்குநிதி வீழ்ச்சி உண்மையாக ஆக 100 இலட்சம் ரூபாய்களாகும். 1960ம் ஆண்டின் முந்திய மூன்று காற்பகுதியிலும் பார்க்க, குறிப்பாக வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் 760 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்த 1959ம் ஆண்டின் நான்காம் காற்பகுதியிலும் பார்க்க, இஃது குறிப்பிடத்தக்க சீர்த்திருத்தமாக விளக்குகிறது.

## III. மகா வங்கியின் கணக்குகளும் இயக்கங்களும்

1960ம் ஆண்டுக்குரிய மகாவங்கியின் நிதிக்கணக்குகள், Iம் பின்னிணைப்பிலுள்ள 6ம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. 1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரதான மாற்றங்கள் பின்வருமாறு:—

| | மாற்றம் | |
|---|---|---|
| | இலட்சம் ரூபாய்கள் | சதவீதம் |
| மொத்தக்கேள்விப் பொறுப்புக்கள் | + 521 | + 6.5 |
| நாணயச் சுற்றேட்டம் | + 233 | + 3.7 |
| கேள்வி வைப்புக்கள் | + 288 | +15.9 |
| (இதில் வர்த்தக வங்கிகள்) | + 449 | +47.1 |
| சர்வதேச ஒதுக்கு நிதி | —1965 | —50.8 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் | +2672 | +52.0 |
| அரசாங்கப்பிணைகளும், அரசாங்க உத்தரவாதமுள்ள பிணைகளும் | +2243 | +65.1 |

+ அதிகரிப்பு.

—குறைவு.

நாணயக் கேள்விப்பொறுப்புக்களில், 1959ம் ஆண்டு முடிவில் 47.2 சதவீதமாக விளங்கிய சர்வதேச ஒதுக்குநிதி, 1960ம் ஆண்டு முடிவில் 22.2 சதவீதத்திற்குக் குறைந்தது.

காலத்திற்குக் காலம், ஸ்டேர்லிங்-டொலர் மாற்று விகித நடமாட்டங்களுக்கு இயைய, அமெரிக்க டொலர்களுக்கு உள்ள மகா வங்கியின் மாற்று விகிதம் மாற்றியமைக்கப்பட்டது.

ஸ்டேர்லிங்குக்கும், இந்திய ரூபாவுக்கும் உள்ள மகா வங்கியின் மாற்று விகிதங்களில் மாற்றமொன்றும் 1960ம் ஆண்டில் ஏற்படவில்லை. இம்மாற்று விகிதங்களாவன:—

| | | வாங்கல் | விற்றல் |
|---|---|---|---|
| ஸ்டேர்லிங் | .. உடனடி | .. 1சி. $\frac{63}{64}$ பெ. | 1 சி. $\frac{61}{32}$ |
| (இலங்கை ஒரு ரூபாய்க்கு) | .. எதிர்கால (6 மாதங்கள் வரை) | .. உடனடிக்கு எதிராக $\frac{1}{128}$ பெ. மாதாந்த கழிவு | .. உடனடிக்கு எதிராக $\frac{1}{128}$ மாதாந்த அதிகவிலை |
| இந்திய ரூபாய்கள் | .. உடனடி | .. 99$\frac{3}{4}$ ரூபாய்கள் | .. 99 $\frac{13}{16}$ ரூ. |
| (இலங்கை 100 ரூபாய்களுக்கு | .. எதிர்கால (6 மாதங்கள் வரை) | .. உடனடிக்கு எதிராக ரூபாயில் $\frac{1}{32}$ மாதாந்த கழிவு | .. உடனடிக்கு எதிராக ரூபாயில் $\frac{1}{32}$ மாதாந்த அதிகவிலை |

மாகாவங்கியின் மொத்த அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் 10ம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. 1959ம் ஆண்டு முறையே 1709 இலட்சம் ரூபாய்களாகவும், 4959 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய உடனடிவாங்கல்களும் உடனடி விற்பனவுகளும் 1960ம் ஆண்டில் 1623 இலட்சம் ரூபாய்களாகவும், 4987இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. எதிர்கால வாங்கல்களுக்காக செய்த ஒப்பந்தங்களின் பொறுமானம் 2185 இலட்சம் ரூபாய்களாகவும் (1959ம் ஆண்டு 2183 இலட்சம் ரூபாய்களாகவும்), எதிர்கால விற்பனவுகளுக்காக செய்தனவற்றின் பெறுமானம் 1425 இலட்சம் ரூபாய்களாகவும் (1959ம் ஆண்டு 524 இலட்சம் ரூபாய்கள்) விளங்கின. முந்திய ஆண்டிலிருந்து வெளிநின்றவற்றையும் அடக்கிய, எதிர்கால வாங்கல் ஒப்பந்தங்களின் கீழ் செய்யப்பட்ட ஒப்படைப்புகள் 2404 இலட்சம் ரூபாய்களாகவும் எதிர்கால விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் 1111 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. ஆகவே மொத்த வாங்கல்கள் (உடனடி வாங்கல்களும், எதிர்கால ஒப்பந்தங்களின் கீழ் செய்யப்பட்ட ஒப்படைப்புக்களும்) 4027 இலட்சம் ரூபாய்களாகவும், மொத்த விற்பனைகள் 6098 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின.

வருமானமும் செலவும்:—இவ்வாண்டுக்குரிய வருமானம் ரூ. 217,84,739.66 சதமாகும். நாணயவிதி அதிகாரச் சட்டம் 38ம் பிரிவின் பிரகாரம் ஒதுக்கு நிதிக்கு செலுத்தப்பட்ட தொகையாகிய ரூ. 111,80,360.01 சதம் உட்பட மகா வங்கியின் செலவு ரூ. 197,84,739.66 சதமாக விளங்கியது. 1960ம் ஆண்டு மார்கழி மாதம் முடிவில், வங்கியின் மொத்தச் சொத்துக்களுக்கும் அந்நிய நாணயங்களில் உள்ள வங்கியின் சொத்துக்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தின் 15 சத வீதத்திலும் பார்க்க, வங்கியினது மூலதன கணக்குகளின் மொத்தம் குறைவாக இருந்தமையால், நிகர இலாபமான 20 இலட்சம் ரூபாய்களும், நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 39 (டி) பிரிவின் பிரகாரம், உபரிக்கு வரவு வைக்கப்பட்டன. இப்பொழுது உபரி 250 இலட்சம் ரூபாய்களாக இருக்கின்றது.

வங்கி மேற்பார்வை:—1960ம் ஆண்டில், நாணய விதி அதிகாரக் சட்டத்தின் 29 (1)ம் பிரிவின் கீழ், வக்கி மேற்பார்வைப் பகுதி 12 வர்த்தக வங்கிகளையும், 29 (2)ம் பிரிவின் பிரகாரம் நாணயச்சபையால் பணித்தபடி வர்த்தக வங்கியல்லாத ஒரு வங்கி நிலையத்தையும், பரிசோதித்தது.

1955க்கு பின்னர், அதிகாரச்சட்டத்தின் 29 (6)ம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட பரிசோதனை காலம், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் வைகாசி மாத 1ம் திகதி தொடங்கி அதைத் தொடர்ந்த ஆண்டின் சித்திரை மாத 30ம் திகதி வரையுள்ள காலமாகும். 1960ம் ஆண்டு, நாணயச்சபை பரிசோதனை காலத்தை மாற்றியமைத்தது. இது 1959/60 காலத்தை 1960ம் ஆண்டு முடிவு வரைக்கும் நீடித்து அத்துடன் 1–1–61 முதல் பரிசோதனை காலம் ஆண்டுகளாக இருக்கும் எனப் பிரகடனம் செய்தது.

1957ம் ஆண்டு 42ம் இலக்க வங்கிப் பற்று வரி அதிகாரச்சட்டத்தின், செயற்படுத்துகை சம்பந்தமான சில கடமைகளையும் மேற்படி பகுதி தொடர்ந்து புரிந்தது.